கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.125/2006

04.08.2022

பெயர் ஜெயராஜ்

வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி

15.01.1943ம் தேதியிட்ட அனந்தன் ஏகாலிக்கு அய்யம்மாள் தனக்காகவும், மைனர் மக்களுக்காகவும் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் - அசல் வா.சா.ஆ.1. 18.01.1945ம் தேதியிட்ட சந்திவீரன் ஏகாலிக்கு அனந்தப்ப ஏகாலி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-2. 27.09.1971 தேதியிட்ட சந்தவீரன் ஏகாலிக்கு, செல்லையா ஏகாலி தனக்காகவும், மைனர் மக்களுக்காகவும் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - அசல் - வா.சா.ஆ-3. 28.03.1996ம் தேதியிட்ட சந்திமுத்து, வேல்ச்சாமி இருவரும் சேர்ந்து எழுதிக்கொண்ட பொதுச்சுவர் உடன்படிக்கை அசல் - வா.சா.ஆ-4. 05.05.2006ம் தேதியிட்ட ஜெயராஜ்க்கு சந்திமுத்து ராஜகோபால், கணேசன் , இளங்கோவன், வேல்ச்சாமி மற்றும் வீரமணி ஆகிய 6 நபர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-5. 16.04.2005ம் தேதியிட்ட வேல்ச்சாமி, சுப்பிரமணியன் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு இரசீது அசல் - வா.சா.ஆ-6. 25.05.2006ம் தேதியிட்ட வாதிகள் வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு - அலுவலக நகல் - வா.சா.ஆ-7. 29.05.2006ம் தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் - வா.சா.ஆ-8. சொத்துவரி இரசீது அசல் வா.சா.ஆ-9. 05.05.2016ம் தேதியிட்ட வேலுச்சாமிக்கு, சந்திமுத்து ராஜகோபால், கணேசன் மற்றும் இளங்கோவன் எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைப்பத்திரம் - சார்பதிவாளர் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ-10. 30.01.1945ம் தேதியிட்ட வீரணன் ஏகாலிக்கு, சந்திவீரன் ஏகாலி எழுதிக்கொடுத்த ஒத்திப்பத்திரம் அசல் - வா.சா.ஆ-11. 28,06,1996ம் தேதியிட்ட குருசாம, சந்திமுத்து, வேலுச்சாமி ஆகியோர்கள் எழுதிக்கொண்ட பொது நடைபாதை சந்து உடன்படிக்கை - அசல் - வா.சா.ஆ-12. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு

06.10.2007ம் தேதியிட்டு, தாக்கல் செய்த அறிக்கை நீ.ம.சா.ஆ-1 மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.2. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது,